கூடுதல் சார்பு நீதிமன்றம், கள்ளக்குறிச்சி
வாக்குமூல படிவம்

**OS.No.60-2021**

Dt.16.07.2025
வா.சா.1. **குணசேகரன்**
குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நல்லதங்காள் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். நான் நல்லதங்காளுக்கு எதிராக எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர் என்னிடம் பெற்ற பணத்தை பெற்று தர கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அவர் எப்போது என்னிடம் பணம் வாங்கினார் என்றால் 2018 ஆம் ஜனவரி மாதம் 10 அல்லது 11 ஆம் தேதி வாங்கினார். நான் நல்லதங்காள் போல் வேறு யாருக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றால் வேறு யாருக்கும் கொடுக்கவில்லை. நான் விவசாயம் செய்கிறேன். நான் வருமான வரி கட்டவில்லை. எனக்கு இந்த ரூ.2,50,000/- எப்படி வந்தது என்றால் விவசாயத்தின் மூலம் வந்தது. எனக்கு நல்லதங்காவை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் அவர் இறப்பதற்கு ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பியிருந்து தெரியும். நல்லதங்காள் இறந்துவிட்டார். அவர் எப்போது இறந்தார் என்று ஞாபகமில்லை. ஆனால் அவர் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். நல்லதங்காள் உயிரோடு இருந்த வரை அவருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் அவரிடம் நேரில் தான் பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டேன். அப்போது அவர் அவருடைய வீட்டின் மீது வழக்கு இருப்பதாகவும் வழக்கு முடிந்த பிறகு பணத்தை திருப்பி கொடுப்பதாகவும் கூறினார். அந்த வழக்கு யார் யாருகிடையில் நடந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நல்லதங்காள் இறந்த பிறகு நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் அவருடைய மகன் வேலுவிடம் பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டேன். அவருக்கும் நல்லதங்காள் என்னிடம் பணம் வாங்கியது தெரியும். வேலு மற்ற பிரதிவாதிகளிடம் கலந்து பேசிவிட்டு செல்வதாக சொன்னார். நல்லதங்காள் என்னிடம் பணம் வாங்கிய போது வேலு இருந்தாரா என்றால் இல்லை.

நல்லதங்காள் என்னிடம் பணம் வாங்கியதாக சொல்லும் தேதியில் அவருக்கு சுமார் எத்தனை வயது இருக்கும் என்றால் 65 வயது இருக்கும். நல்லதங்காள் எதற்காக என்னிடம் பணம் வாங்கினார் என்றால் அவர் வீட்டிற்கு எதிராக நடக்கும் வழக்கை பைசல் செய்வதற்காக வாங்கினார். பிரதிவாதிகளுக்கு எதிராக ஏன் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதிகள் நல்லதங்காளின் வாரிசுகள். அவர்கள் தான் நல்லதங்காவின் சொத்தை அடைந்துள்ளார்கள் அதனால் தான் இந்த வழக்கை அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். நான் பிரதிவாதிகளுக்கு கொடுத்த அறிவிப்பிற்கு அவர்கள் பதிலறிவிப்பு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ஆவண எழுத்தர் முருகேசன் அலுவலகத்தில் வைத்து காலை 11.00 மணிக்கு எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ல் சாட்சி கையெழுத்து போட்டுள்ள நபர்கள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை. அவர்களை நல்லதங்காள் தான் அழைத்து வந்தார். நான் தான் நல்லதங்காள் மற்றும் சாட்சிகளை ஆவண எழுத்தர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றேனா என்றால் நான் நல்லதங்காவை என்னுடைய இரண்டு சக்கர வாகனத்தில் ஆவண எழுத்தர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றேன். சாட்சிகள் ஆவண எழுத்தர் அலுவலகத்திற்கு வந்துவிட்டனர். வா.சா.2 மற்றும் 3 யை நான் தான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைத்து வந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ள கைரேகைகள் நல்லதங்காளுடையது என்பதை நிரூபிக்க அதனை பரிசோதனைக்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் பிரதிவாதிகள் அந்த ரேகைகள் நல்லதங்காளுடையது இல்லை என்று சொன்னால் அதனை பரிசோதனைக்கு அனுப்ப தயாராக உள்ளேன். நல்லதங்காள் வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியிலேயோ வேறு தேதிகளிலோ வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையோ அல்லது வேறு தொகையோ என்னிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் நல்லதங்காவின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காக சாட்சிகளுடன் சேர்ந்து வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை ஜோடித்துள்ளோம் என்றும் வா.சா.ஆ.1 ல் உள்ள கைரேகைகள்

நல்லதங்காவின் கைரேகையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டிற்காக எந்த தொகையும் செலுத்த கடமைப்பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும் அது செல்லதக்கதல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:-**

இல்லை.